Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

Multiple Choice Question

1."மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" - கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது.
ஆ) பொதிகையில் தோன்றியது.
இ) வள்ளல்களைத் தந்தது.
(a) க மட்டும் சரி (b) க, ஆ இரண்டும் சரி (c) இ மட்டும் சரி (d) க, இ இரண்டும் சரி

2.'இளந்தமிழே' கவிதை, இடம்பெற்றுள்ள நூல் _____
(a) ஒளிப்பறவை (b) சர்ப்பயாகம் (c) சூரிய நிழல் (d) நிலவுப்பூ

3.கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல் _____
(a) நிலவுப்பூ (b) சூரிய நிழல் (c) ஒரு கிராமத்து நதி (d) பூஜ்யங்களின் சங்கிலி

4.'முத்தமிழே' என்பது, _____ எனப் பிரியும்.
(a) முத் + தமிழே (b) மு + தமிழே (c) முத்து + தமிழே (d) மூன்று + தமிழ் + ஏ

5.'குளிர்பொதிகை' என்பதன் இலக்கணக் குறிப்பு _____
(a) பண்புத்தொகை (b) வேற்றுமைத்தொகை (c) வினைத்தொகை (d) உவமைத்தொகை

6.'இயம்பிடாய்' என்பதில் அமைந்த பகுதி _____
(a) இயம்பு (b) இயம்பி (c) இயம்பு (d) இயம்பிடு

7.1963 - ல் வெளிவந்த சிற்பி பாலசுப்பிரமணியத்தின் முதல் கவிதைத் தொகுப்பு _____.
(a) ஒளிப்பறவை (b) நிலவுப்பூ (c) ஒரு கிராமத்து நதி (d) சூரிய நிழல்

8.நம் பண்பாட்டின் நீட்சி _____.
(a) கவிதை (b) காப்பியம் (c) இசை (d) தமிழ்மொழி

9.செந்நிறத்துப் பூக்காடு _____.
(a) வானம் (b) பரிதி (c) கைகள் (d) தலை

10.கவிதை வெறிக்கு உணவாய் உள்ளது _____.
(a) வியர்வை (b) செந்நிறம் (c) பூக்காடு (d) முத்தமிழ்

11.தமிழ்மொழி கொலுவிருந்தது _____ சங்கத்தில்.
(a) சோழர் (b) சேரர் (c) பாண்டியர் (d) முதல்

12.கூவி வா, வா! குயிலே! என்று சிற்பி பாலசுப்பிரமணியம் அழைப்பது _____.
(a) தமிழை (b) பரிதியை (c) கைகளை (d) வள்ளல்களை

13.தமிழன்னை ஈன்று தந்தது _____.
(a) பாண்டியர்களை (b) குயில்களை (c) வள்ளல்களை (d) பொதிகையை

14.பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா! என்று அழைப்பவர் _____.
(a) தி.சு. நடராசன் (b) பாண்டியர் (c) சிற்பி பாலசுப்பிரமணியம் (d) பாரதி

15.தம் கைகள் சிவந்து நோக வியர்வை சிந்தி உழைப்பவர்கள் _____.
(a) பாண்டியர்கள் (b) வள்ளல்கள் (c) புலவர்கள் (d) தொழிலாளர்கள்

16.மலைமேட்டில் தலையைச் சாய்ப்பவன் _____.
(a) செம்பரிதி (b) செந்நிறப்பூக்காடு (c) தொழிலாளர் (d) சிங்கம்

17.சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம் _____.
(a) பாரதிதாசன் (b) பாரதியார் (c) மனோன்மணியம் (d) அன்னை தெரசா

18.இரு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் _____.
(a) சிற்பி பாலசுப்பிரமணியம் (b) தி.சு.நடராசன் (c) ரா.அ. பத்மநாபன் (d) பரலி.சு.நெல்லையப்பர்

19.சாகித்திய அகாதெமி விருது பெற்ற சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதை நூல் _____.
(a) நிலவுப்பூ (b) ஒரு கிராமத்து நதி (c) ஒளிப்பறவை (d) சர்ப்பயாகம்

20.நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர் _____.
(a) பாரதியார் (b) தி.சு.நடராசன் (c) பரலி.சு.நெல்லையப்பர் (d) சிற்பி பாலசுப்பிரமணியம்

21.இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்டவை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் _____.
(a) கவிதை நூல்கள் (b) உரைநடை நூல்கள் (c) மொழிபெயர்ப்பு நூல்கள் (d) புதினங்கள்

22._____ இருந்து கவிதைகளையும் புதினங்களையும் சிற்பி பாலசுப்பிரமணியம் மொழிபெயர்த்துள்ளார்.
(a) மலையாளத்தில் (b) கன்னடத்தில் (c) மராத்தியில் (d) ஆங்கிலத்தில்

23.சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக இருப்பவர் _____.
(a) தி.சு.நடராசன் (b) பரலி.சு.நெல்லையப்பர் (c) ரா.அ.பத்மநாபன் (d) சிற்பி பாலசுப்பிரமணியம்

24.'பொதிகை' என்பது எந்த மலையைக் குறிக்கும்?
(a) குற்றால மலை (b) விந்திய மலை (c) இமய மலை (d) சாமிமலை

25.சிற்பி பாலசுப்பிரமணியம் எந்நூலை மொழிபெயர்த்தமைக்காகச் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்?
(a) அக்கினி (b) ஒளிப்பறவை (c) அக்கினிசாட்சி (d) சூரியநிழல்

26.'சாய்ப்பான்' என்பதன் சரியான பகுபத பிரிப்பு முறை
(a) சாய்ப்பு + ஆன் (b) சாய் + ப் + ஆன் (c) சாய் + ப் + ப் + அன் (d) சாய் + ப் + ப் + ஆன்

27.கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கியத்திற்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது?
(a) ஒரு கிராமத்தின் கதை (b) ஒரு கிராமமே அழுதது (c) ஒரு கிராமத்தின் நதி (d) ஒரு புளியமரத்தின் கதை

28.'செந்தமிழ்' - எந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் சரியாகப் புணரும்?
(a) ஈறுபோதல், இனமிகல் (b) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல் (c) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் (d) ஈறுபோதல்

29.'வியர்வை வெள்ளம்' - இலக்கணக் குறிப்புத் தருக.
(a) உவமையாகுபெயர் (b) கருவியாகு பெயர் (c) உருவகம் (d) உவமைத்தொகை

30.இவற்றுள் எது கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்?
(a) சூரிய காந்தி (b) சூரிய பார்வை (c) ஒளிப்பூ (d) சூரிய நிழல்

31.கருத்து 1 : பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் தமிழ்த்தாய்.
கருத்து 2 : விம்முகின்ற தோள்கள் செந்நிறத்துப் பூக்காடானது.
(a) கருத்து 1 சரி (b) கருத்து 2 சரி (c) இரண்டு கருத்தும் தவறு (d) கருத்து 1 சரி, 2 தவறு

32.'இளந்தமிழே' என்னும் பாடல் நூலின் ஆசிரியர்
(a) சிற்பி பாலசுப்பிரமணியம் (b) பெருந்தேவனார் (c) தமிழண்ணல் (d) மு. வரதராசனார்

33.பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள்
(a) கோப்பெருந்தேவி (b) வேண்மாள் (c) தமிழன்னை (d) ஔவையார்

34._____ முதலான வள்ளல்களை ஈன்று தந்தவள் தமிழன்னை.
(a) சடையப்ப வள்ளல் (b) சீதக்காதி (c) பாரி (d) நெடுங்கிள்ளி

35.எம்மருமைச் செந்தமிழே! உன்னையல்லால் ஏற்றதுணை வேறுண்டோ - என்று பாடியவர்
(a) பாரதியார் (b) பாரதிதாசன் (c) சிற்பி பாலசுப்பிரமணியம் (d) திரு. வி. க

36.'இளந்தமிழே' என்னும் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பாடலில் இடம்பெற்றுள்ள பாவகை
(a) நேரிசை ஆசிரியப்பா (b) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (c) கலி விருத்தம் (d) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

37.செம்பரிதி - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைக் கண்டறிக.
(a) ஈறுபோதல் (b) இனமிகல் (c) ஆதிநீடல் (d) முன்நின்ற மெய்திரிதல்

38.உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - என்ற விதிக்குப் பொருத்தமான சொல்லைக் கண்டறிக.
(a) உன்னையல்லால் (b) வானமெல்லாம் (c) செந்தமிழே (d) செம்பரிதி

39.

அ) செம்பரிதி	1) உருவகம்
ஆ) முத்துமுத்தாய்	2) வினையெச்சம்
இ) சிவந்து	3) அடுக்குத்தொடர்
ஈ) வியர்வைவெள்ளம்	4) பண்புத்தொகை

(a)

அ	ஆ	இ	ஈ
4	3	2	1

(b)

அ	ஆ	இ	ஈ
3	4	1	2

(c)

அ	ஆ	இ	ஈ
2	1	4	3

(d)

அ	ஆ	இ	ஈ
3	2	1	4

40.'இளந்தமிழே' என்னும் கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் எக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
(a) சூரிய நிழல் (b) ஒரு கிராமத்து நதி (c) ஒளிப்பறவை (d) நிலவுப்பூ

41.சிற்பியின் பன்முகங்களில் பொருந்தாததைக் கூறுக.
(a) கவிஞர் (b) ஓவியர் (c) பேராசிரியர் (d) மொழிபெயர்ப்பாளர்

42.சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம்
(a) பாரதியார் (b) பாரதிதாசன் (c) தமிழ் (d) காமராசர்

43.சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்?
(a) மூன்று (b) இரு (c) நான்கு (d) பல

44.சிற்பி பாலசுப்பிரமணியம் சாகித்திய அகாதெமியின் _____ இருக்கிறார்.
(a) தலைவராக (b) செயலாளராக (c) பொருளாளராக (d) உறுப்பினராக

QB TM 365 Study Material QUESTION BANK